
SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

**DAILY CURRENT AFFAIRS ON 05/ 03/2026**



# இந்தியா வந்தார் பின்லாந்து அதிபர்: பிரதமர் மோடியுடன் இன்று பேச்சு

**புது தில்லி, மார்ச் 4:** பின்லாந்து அதிபர் அலெக்ஸாண்டர் ஸ்டப் 4 நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு புதன்கிழமை வந்தார்.

வர்த்தகம், முதலீடு, முக்கிய தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய, சர்வதேச விவகாரங்கள் குறித்தும் பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் வியாழக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மேற்காசிய போர் நிலவரம் குறித்தும் இரு தலைவர்களும் விவாதிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தில்லியில் கடந்த மாதம் நடைபெற்ற சர்வதேச செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தாக்க உச்சி மாநாட்டில் பங்கேற்றிருந்த அலெக்ஸாண்டர், சில வாரங்களுக்குள் மீண்டும் இந்தியப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள், உயரதிகாரிகள் மற்றும் தொழில் துறைத் தலைவர்களும் வந்துள்ளனர்.



தில்லியில் உள்ள பாலம் விமானப்படை தளத்தில் வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்லாந்து அதிபர் அலெக்ஸாண்டர் ஸ்டப்.

தில்லி விமான நிலையத்தில் புதன்கிழமை வந்திறங்கிய அதிபர் அலெக்ஸாண்டருக்கு அரசுமுறைப்படி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் நேரில் வரவேற்றார்.

இந்தியாவை வந்தடைந்ததும் சமூக ஊடகத்தில் பதிவிட்ட அலெக்ஸாண்டர், 'பின்லாந்து-இந்தியா இடையே வர்த்தகம் உள்ளிட்ட இருதரப்பு உறவுகளை எனது பயணம் மேலும் வலுப்படுத்தும்' என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அவரது இந்தப் பதிவுக்கு பதிலளித்த பிரதமர் மோடி, 'பின்லாந்து அதிபர் அலெக்ஸாண்டரை இந்தியாவுக்கு வரவேற்கிறேன். உங்களின் பயணம், இருதரப்பு உறவுகளை புதிய உச்சத்துக்கு இட்டுச் செல்லும் என்பதில் முழுமையாக உடன்படுகிறேன். இருதரப்பு பேச்சுவார்த்தை மற்றும் ரெய்ஸினா மாநாட்டில் உங்களின் உரையை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன்' என்று தெரிவித்துள்ளார்.

**ரெய்ஸினா மாநாட்டில்...:** புவி-அரசியல் மற்றும் புவி-பொருளாதாரம் தொடர்பாக விவாதிக்கும் ரெய்ஸினா மாநாடு, தில்லியில் வியாழக்கிழமை (மார்ச் 5) தொடங்கி மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது. தொடக்க அமர்வில் பின்லாந்து அதிபர் அலெக்ஸாண்டர் ஸ்டப் உரையாற்றவுள்ளார்.

பிரதமர் மோடியுடன் நடத்தும் பேச்சுவார்த்தைக்குப் பின் இரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஆகியோரையும் அலெக்ஸாண்டர் சந்தித்துப் பேசவுள்ளார். மும்பைக்கு வெள்ளிக்கிழமை பயணிக்கும் அவர், இந்திய தொழில் துறைத் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.





# இயற்கை எரிவாயு உற்பத்தியை நிறுத்தியது கத்தார்

## இந்திய விநியோகம் பாதிக்க வாய்ப்பு

**புது தில்லி, மார்ச் 4:** திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) உற்பத்தியை கத்தார் நிறுத்தியுள்ளது. இதனால், இந்தியாவுக்கான எரிவாயு விநியோகம் பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளது.

கத்தாருடன் இந்தியா நீண்ட காலத்துக்கான இயற்கை எரிவாயு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் எரிவாயு தேவையை நிறைவு செய்வதில் கத்தார் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்நிலையில், ஈரான் நடத்திய வான்வழித் தாக்குதலில் கத்தாரில் உள்ள எரிவாயு உற்பத்தி ஆலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து, அங்கு உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், இந்தியாவுக்கான எரிவாயு விநியோகம் பாதிக்கும் சூழல் எழுந்துள்ளது. இதனால் தொழிலக பயன்பாடு மற்றும் நகர்ப்புறங்களில் வீட்டு உபயோகத்துக்கு குழாய் மூலம் எரிவாயு விநியோக நிறுவனங்கள் பாதிக்கப்படும் என்று தெரிகிறது.

தொழில் நிறுவனங்களில் எல்என்ஜி-க்கு பதிலாக சற்று விலை அதிகமான சிஎன்ஜி எரிவாயுவைப் பயன்படுத்தி நிலைமையைச் சமாளிக்க வாய்ப்பு உள்ளது.



# கேரளத்தில் மலையாளம் மட்டுமே அலுவல்பூர்வ மொழி

## மாநில அரசின் மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல்

**திருவனந்தபுரம், மார்ச் 4:** கேரள அரசு நிர்வாகத்தில் மலையாளத்தை மட்டுமே அலுவல்பூர்வ மொழியாக பயன்படுத்த வகை செய்யும் மசோதாவுக்கு மாநில ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் புதன்கிழமை ஒப்புதல் வழங்கியதாக அவரது மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

'மலையாள மொழி மசோதா-2025' எனும் இந்த மசோதாவின்படி, கேரளத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து பள்ளிகளிலும் 10-ஆம் வகுப்பு வரை முதல் மொழிப் பாடமாக மலையாளம் கற்பது கட்டாயமாகும்.

அதேநேரம், மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்களுக்கு விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு அக்டோபரில் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவுக்கு கர்நாடக அரசுத் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

கேரளத்தில் கர்நாடக எல்லையையொட்டி வாழும் கன்னட மாணவர்கள் மீது மலையாளம் திணிக்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

அதேநேரம், 'கேரளத்தில் வாழும் தமிழ், கன்னடம் போன்ற மொழியியல் சிறுபான்மையினரின் மொழி சார் உரிமைகளைப் பாதுகாக்கும் தெளிவான-சந்தேகத்துக்கு இடமில்லாத பிரிவுகள் மசோதாவில் அடங்கியுள்ளன. மொழிச் சுதந்திரத்தை முழுமையாக பாதுகாக்கும் அம்சங்கள் உள்ளன.

குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் தமிழ், கன்னட மக்கள், கேரள அரசுடனான தங்களின் தொடர்புகளை அவர்களின் தாய்மொழியிலேயே தொடர்ந்து மேற்கொள்ள முடியும்.

மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்கள், தேசிய கல்வி பாடத்திட்டத்தின்கீழ் பள்ளிகளில் கிடைக்கப் பெறும் எந்தவொரு மொழியையும் தேர்வு செய்யும் சுதந்திரம் உள்ளது' என்று முதல்வர் பினராயி விஜயன் விளக்கமளித்திருந்தார்.

மேற்கண்ட மசோதாவின்படி, பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து கேரளத்தில் கல்வி பயிலும் மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்கள், 9, 10-ஆம் வகுப்பு மற்றும் மேனிலைக் கல்வி அளவில் கட்டாய மலையாள மொழித் தேர்வை எழுதுவதில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.




தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026-ஐ தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் நா.முருகானந்தம், தொழில் துறைச் செயலர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தாரேஸ் அகமது உள்ளிட்டோர்.

# தமிழ்நாடு ஒருங்கிணைந்த குடிநீர் குறைதீர்வு மையம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, மார்ச் 4:** தமிழகம் முழுவதும் குடிநீர் விநியோகம் தொடர்பான புகார்களின் மீது நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு ஒருங்கிணைந்த குடிநீர் குறைதீர்வு 'புனல்' மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை தொடங்கி வைத்தார்.

தமிழகம் முழுவதும் குடிநீர் தொடர்பான அனைத்து வகை புகார்களை பொதுமக்கள் எளிதில் தெரிவிக்கும் வகையில் தமிழக குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் சார்பில் ஒருங்கிணைந்த குடிநீர் குறைதீர்வு 'புனல்' மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தின் செயல்பாடுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

**கட்டணமில்லா எண்:** இந்த மையம் 24 மணி நேரமும் இயக்கப்படும். குடிநீர் கிடைக்கும் தன்மை, நீரின் தரம், விநியோகத்தில் ஏற்படும் இடையூறுகள் என பொது மக்கள் தங்களது அனைத்து புகார்களையும் ஒரே இடத்தில் பதிவு செய்யலாம்.

அந்தப் புகார்கள் தானாகவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் சென்றடையும். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு புகாரின் மீதும் விரைந்து வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வழிமுறை, துறைகளுக்கு இடையே தாமதங்களைக் கணிசமாகக் குறைத்து, விரைவான குறைதீர்ப்பை உறுதி செய்கிறது.

பொதுமக்கள் '1916' என்னும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் வாயிலாக புகார்களை தெரிவிக்கலாம். punal.tn.gov.in என்ற இணையதளம் மற்றும் 94999-91916 'வாட்ஸ்ஆப்' எண்ணுக்கு குறுச்செய்தியாகவும் புகார்களை அனுப்பலாம்.




### உங்களுக்குத் தெரியுமா?

மிக உயரமான விமானத்தை உடைய தமிழகக் கோயில்கள்:

தஞ்சைப் பெரிய கோயில் – 216 அடி உயரம்- முதலாம் இராஜராஜ சோழன்

கங்கை கொண்ட சோழபுரம் – 170 அடி உயரம் – முதலாம் இராஜேந்திர சோழன்

திரிபுவனம் கம்பகரேசுவரர் கோயில் - 126 அடி உயரம் – மூன்றாம் குலோத்துங்க சோழன்

**The National Shipbuilding and Heavy Industries Park was established at:**

A) Chennai Port
B) Kamarajar Port
C) VOC Port, Thoothukudi
D) Kochi Port

தேசிய கப்பல் கட்டும் மற்றும் கனரக தொழில் பூங்கா நிறுவப்பட்ட இடம்:

A) சென்னை துறைமுகம்
B) காமராஜர் துறைமுகம்
C) VOC துறைமுகம், தூத்துக்குடி
D) கொச்சி துறைமுகம்







**The Tamil Nadu Global Tourism Summit was held at:**

A) Chennai
B) Coimbatore
C) Madurai
D) Mamallapuram, Chengalpattu

**தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு நடைபெற்றது:**
அ) சென்னை
B) கோயம்புத்தூர்
C) மதுரை
D) மாமல்லபுரம், செங்கல்பட்டு





**Tamil Nadu's first dog park was inaugurated in which district?**

A) Chennai
B) Coimbatore
C) Nilgiris
D) Madurai

**தமிழ்நாட்டின் முதல் நாய் பூங்கா எந்த மாவட்டத்தில் திறக்கப்பட்டது?**
அ) சென்னை
ஆ) கோயம்புத்தூர்



| | |
|---|---|
| இ) நீலகிரி<br>ஈ) மதுரை | |
| **The "Makkalai Thedi Maruthuvam" scheme was launched at:**<br><br>A) Krishnagiri<br>B) Samanapalli<br>C) Salem<br>D) Dharmapuri<br><br>"மக்களை தேடி மருத்துவம்" திட்டம் தொடங்கப்பட்டது:<br>A) கிருஷ்ணகிரி<br>B) சமனப்பள்ளி<br>C) சேலம்<br>D) தர்மபுரி | <br><br>Makkalai Thedi Maruthuvam scheme was launched on August 5, 2021 in Samanapalli. |
| **Consider the following statements:**<br><br>1. The Free Meals to Sanitation Workers Extension Scheme was launched on February 9, 2026.<br>2. It was launched at Polivakkam in Thiruvallur district.<br>3. The scheme provides two meals per day to sanitation workers.Which of the statements given above is/are correct?<br><br>A) 1 and 2 only<br>B) 2 and 3 only<br>C) 1 and 3 only<br>D) 1, 2 and 3<br><br>பின்வரும் கூற்றுகளைக் கவனியுங்கள்:<br><br>1.துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச உணவு விரிவாக்கத் திட்டம் பிப்ரவரி 9, 2026 அன்று தொடங்கப்பட்டது.<br><br>2.இது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொலிவாக்கத்தில் தொடங்கப்பட்டது.<br><br>3.இந்தத் திட்டம் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவு வழங்குகிறது.<br><br>மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது சரியானது/சரியானது?<br>A) 1 மற்றும் 2 மட்டும் | **Tamil Nadu Sanitary Workers Welfare Board was established on June 11, 2007**<br> |

| | |
|---|---|
| B) 2 மற்றும் 3 மட்டும்<br>C) 1 மற்றும் 3 மட்டும்<br>D) 1, 2 மற்றும் 3 | |
| **The app launched by the Tamil Nadu Government for government examination preparation is:**<br><br>A) Nokkam<br>B) Thittam<br>C) Thervu Kalam<br>D) Namma Arasu<br><br>அரசு தேர்வுக்கு தயாராகும் வகையில் தமிழக அரசு தொடங்கியுள்ள செயலி:<br><br>A)நோக்கம்<br>B) திட்டம்<br>C) தேர்வு கலாம்<br>D) நம்ம அரசு |  |